# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்

பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை

ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்

ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | திண்டுக்கல் | காலம் : | 03/08/2022 | முதல் | 07/08/2022 |
| அறிக்கை எண் : | 061/ 2022 | வெளியீட்டு நாள் : | 02/08/2022 | | |

## திண்டுக்கல் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32° - 35° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (29.07.2022 முதல் 01.08.2022) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 07-08-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **29/07** | **30/07** | **31/07** | **0108** | தேதி | நாள்-1 03/08 | நாள்-2 04/08 | நாள்-3 05/08 | நாள்-4 06/08 | நாள்-5 07/08 |
| 14.0 | 1.4 | 22.6 | 19.2 | மழை (மி.மீ) | 40 | 55 | 45 | 22 | 8 |
| 34 | 32 | 35 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 27 | 27 | 27 | 29 |
| 24 | 25 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 21 | 21 | 20 | 21 | 21 |
| 6 | 6 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 7 | 7 | 5 |
| 90 | 76 | 80 | 89 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 85 | 85 | 85 | 85 | 75 |
| 64 | 65 | 54 | 70 | | 75 | 75 | 75 | 75 | 65 |
| 3 | 5 | 6 | 4 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 12 | 16 | 16 | 16 | 10 |
| **தெற்கு** | தெற்கு | தென் கிழக்கு | தென் மேற்கு | **காற்றின் திசை** | **தென்மே மேற்கு** | தெற்கு | **தென்மே மேற்கு** | **தென்மே மேற்கு** | **தென்மே ற்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் அடுத்த 3 நாட்களுக்கு சற்றே கன மழையும், ஆகஸ்ட் 6, 7 தேதி மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 27° - 29° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 20°-21° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 10 முதல் 16 கி.மீ வேகத்தில், தென்மேற்கு மற்றும் தெற்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சிலஙி இடங்களில் ஆகஸ்ட் 3, 4, 5 மற்றும் 6ம் தேதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யஙீ வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை

ஒத்தி வைக்கும்படியும்‚ விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும்‚ கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும்‚ மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்

**அடுத்த து வாரத்திற்கான ன விரிவாக்கபட்ட ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (05-11 ஆகஸ்ட் 2022):**

**மழைப்பொழிவு :**

நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி‚ வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை விட கூடுதலான மழை பெய்ய வாய்ப்பு.

**அதிகபட்ச ச வெப்பநிலை :**

அடுத்த 7 நாட்களுக்கு மாவட்டத்தில் அதிகபட்ச ச வெப்பநிலையானது பொதுவாக க இயல்பை ஒட்டியே காணப்படும் 26°செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க க வாய்ப்பு.

**குறைந்தபட்ச ச வெப்பநிலை :**

குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில்‚ மாவட்டத்தில் அடுத்த 7 நாட்களுக்கு பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும்.20° செல்சியஸ் முதல் 26° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

**இடி மின்னல் எச்சரிக்கை:**

வரும் 03.08.2022 முதல் 07.08.2022 தேதிகளில் தமிழகத்தின் ஒரு சில இடங்களில் இடி மின்னலுக்கான வாய்ப்பு உள்ளது. வயல்களில் ஆடுகளை கிடை அமர்த்துதல் மற்றும் மேய்ச்சலின் போது போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும். இந்த காலகட்டத்தில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியே அனுப்பாமல், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**

**முக்கிய பயிர்கள்** : மக்காச்சோளம், தக்காளி, கால்நடை.

**மக்காச்சோளம்:**

- மக்காச்சோளம் விதைப்பிற்கு தயாராகி வரும் வேளையில் மக்காச்சோள விதைகளை விதைநேர்த்தி செய்தல் மிகவும் அவசியமாகும்.
- தங்களது மண் வகைக்கேற்ற நல்ல தரமான விதைகளை தேர்ந்தெடுக்க வேண்டும்

**தக்காளி:**

- தக்காளி பயிரைத் தாக்கும் நாற்றழுகல் நோய் கட்டுப்படுத்த 1கிலோ விதைக்கு 10 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

**.கால்நடை:**

- ஆங்காங்கே தொடர்ந்து மழை பெய்து வருவதால் ஆடுகளை துள்ளுமாரி நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்க துள்ளுமாரி நோய்க்கான தடுப்பூசியை 6 மாத வயதுள்ள ஆட்டுக் குட்டிகளுக்கு போட வேண்டும்.